# WORDS OF PEACE.

## சாந்திவசனம்.

ॐ

सत्यान्नास्ति परो धर्मः।

மாதா ஸ்ரீ அன்னி பெஸன்டு அம்மையவர்களால்
இயற்றப்பட்ட

# Elementary Lessons on Karma.

# கர்மபாலபோதம்.

திருமியச்சூர் ப்ராம்மஞானசங்கம் காரியதரிசி
R. ஸ்வாமிநாதய்யரால் மொழிபெயர்க்கப்பெற்றது

ஜனவரி 1916.

Published by

A. RATNASABHAPATHI MUDALIAR, F. T. S.,
*Santhi Asramam T. S., Tirumiyachoor,*
*Peralam Post,* Tanjore Dist.

மாயவரம் வால்மீகி அச்சுக்கூடத்தில் அச்சியற்றியது.

*All rights reserved.*] [விலை 0—2—0

# WORDS OF PEACE. 1.

## சாந்திவசனம்.

ௐ

सत्यान्नास्ति परो धर्मः।

மாது ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையவர்களால்
இயற்றப்பட்ட

# Elementary Lessons on Karma.

# கர்ம பாலபோதம்.

திருமியச்சூர் ப்ரம்மக்ஞானசங்கம் காரியதரிசி
R. ஸ்வாமிநாதய்யரால் மொழிபெயர்க்கப்பெற்றது.

ஜனவரி 1916

Published by
A. RATNASABHAPATHI MUDALIAR, F. T. S.,
*Sânthi Âsramam T. S., Tirumlyaohoor,*
*Peralam Post*, Tanjore Dist.

மாயவரம் வால்மீகி அச்சுக்கூடத்தில் அச்சியற்றியது

*All rights reserved.*] [விலை 0—2—0

# முகவுரை.

பிரம்மஞானசங்கத்தாரால் வெளியிடப்பட்டுவரும் Adyar Pamphlets, Adyar Popular Lectures முதலிய சிறு இங்கிலீஷ் புஸ்தகங்களை, இங்கிலீஷ் பயிற்சி இல்லாத தமிழ் மெம்பர்களும், மற்ற அபிமானிகளும் படித்துத் தெரிந்துகொள்ளும்பொருட்டு தமிழில் மொழிபெயர்த்து, மாதமொரு புஸ்தகமாக வெளியிட உத்தேசித்திருக்கிறோம். அதில் இது முதற் புஸ்தகம். மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையவர்களால் இயற்றப்பட்ட Elementary Lessons on Karma என்ற புஸ்தகத்தை கர்மபாலபோதம் என்ற பெயரால் என்னால் இயன்ற வரையில் மொழிபெயர்த்திருக்கிறேன். இம்மொழிபெயர்ப்பின்கண்ணுள்ள குற்றங்களை அறிஞர்கள் பொறுத்து, மூலத்துக்கு ஒத்துவராமல் காணப்படும் இடங்களை எம்மிடம் அன்புகூர்ந்து தெரிவிப்பார்களாகில் வந்தனத்துடன் அங்கீகரித்து இப்புஸ்தகம் மறுமுறை அச்சிட நேரிடுங்காலத்தில் சேர்த்து அச்சிடுவோம்.

இதை அச்சியற்றும்போது, மாயவரம் வால்மீகி பிரஸ் அதிபரான ப்ரம்மஸ்ரீ T. S. நடேச சாஸ்திரியார் அவர்கள் சில வாக்கிய அம்சங்களைத் திருத்தி உதவி புரிந்ததற்காக அவர்கள்பால் மிகுந்த நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**R.** ஸ்வாமிநாத அய்யர்.

ௐ

सत्यान्नास्ति परो धर्मः।

# கர்ம பாலபோதம்.

கர்மம் என்பதைப்பற்றிய வினாக்கள் சிலசமயம் வித்தியார்த்திகளை, அவர்கள் முதிர்ந்தோரானாலும், சிறியோரானாலும் மிகவும் சிக்கலுறச் செய்கின்றன. அதைவிடச்சிக்கலுள்ள கேள்விகள் அதிகமில்லை கர்மமென்றால் என்ன? அது எப்பொழுது உற்பத்தியாயிற்று? அது எவ்வளவுதூரம் நம்மைக்கட்டுப்படுத்தும்? அதற்கு நாம் ஊழியர்களா அல்லது எஜமான்களா? அதன் முன் நாம் தாழ்மையாய் வணங்கவேண்டுமா அல்லது அதை பலமாய் எதிர்த்து போர்புரிய வேண்டுமா? இன்றையதினமானது நேற்றையதினத்திலிருந்து வளர்ந்ததென்றும் நேற்றையதினம் அதற்கு முன்தினத்திலிருந்து வந்ததென்றும் இப்படிப்பின்னுக்குப் பின் செல்வோமானால் கெட்டவன் நல்லவனாய் ஆவது எங்ஙனம்? நாம் உண்மையில் ஓர் உறுதியான அவசியத்தால் கட்டாயப்படுத்தப்பட்டு கவிஞர்கள் என்ன சொன்னபோதிலும், நாம் வீரர்களாகாமல் "பேசமுடியாதவும் பிறரால் நடத்தப்படுபவுமான மிருகங்கள்" போலிருக்கிறோமல்லவா?

இந்த வினாக்களையும் இவைகள்போன்ற மற்றவைகளையும் விசாரணைசெய்வதில் பிரயோஜனகரமாய் கொஞ்சகாலம் செலவுசெய்வோம். ஏனெனில் மற்றவிடங்களிற்போல் இங்கும் "அற்பப்படிப்பு ஆபத்தாயிருக்கிறது". கர்மமென்பது நம்மை புத்தியாயும் நேர்மையாயும் நடக்கும்படி செய்யும் ஓர் பலமாயுப்,வழிகாட்டியாயுப் சக்தியாயும் அது இருக்கவேண்டியபடி இருப்பதற்

குபதிலாக, அது நன்மை நகரவொட்டாமற்செய்கிற விலங்காய் அடிக்கடி சொள்ளப்படுகிறது. பிரகிருதியின் மற்றெல்லா நியாயங்களையும்போல், அது மூடர்களை பந்தத்திற்குள்ளாக்கியும், அறிவாளிகளுக்கு சக்தியையும் கொடுக்கிறது.

இந்த நம்முடைய முதற்படியிருக்கிறது : கர்மமென்பது ஒரு பிரகிருதிதர்மம். இன்னும் அது ஒரு முக்கியதர்மமென்றும் சொல்லலாம். ஏனெனில், அது எங்கும் எப்போதுமுள்ளதாயிருக்கிறது — எங்கும் நிறைந்ததாயும் சர்வவியாபகமாயுமுள்ளது. மேற்குதேசங்களில் அதற்கு வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்பெயர்கள் மிகவும் உபயோகமுள்ளவை. ஏனெனில் கிழக்குதேசங்களில் கர்மத்தின் தாத்பர்யத்தை கறைப்படுத்துகிற எல்லா பாரம்பர்ய அபிப்பிராயங்களும், தர்கங்களும் அவைகளிலில்லை. மேற்குதேசத்து தத்வசாஸ்திரி அதற்கு "காரண காரிய நியாயம்" என்று பெயர் கொடுத்திருக்கிறான். ஒவ்வொரு சம்பவத்திலும் இரண்டு சேர்ந்த ஒரு விஷயத்தைப்பார்க்கிறான். அது ஒரு காரியம் காரணம் இரண்டுமாயிருக்கிறது. அதற்கு ஒரு காரணமிருப்பதால் அது ஒரு காரியமாயுமிருக்கிறது, முந்தி ஏதோசம்பவித்து இந்தக்காரியம் நிகழும்படியாய்ச்செய்திருக்கிறது. அது ஓர் காரணமாயுமிருக்கிறது. ஏனெனில் அது புதுசம்பவமொன்றை உற்பத்திசெய்யும், வேறொன்றும் அதிலிருந்துண்டாகும். ஒரு மனிதன் தன் தகப்பனுடைய பிள்ளையாயும் தன் பிள்ளைக்குத் தகப்பனுமிருக்கிறான். அவனுடைய தகப்பனார் தன் தகப்பனுக்குப்பிள்ளையாயும் அவனுடையபிள்ளை முறையே தன் பிள்ளைக்குத் தகப்பனுமாவான். அதுபோலவே காரண காரியங்களும் ஏற்படுகின்றன. ஒவ்வொரு சம்பவமும் ஏககாலத்தில் கார்யமாயும் காரணமாயுமிருக்கிறது. சென்றுபோன ஒன்றின் காரியமாகவும், வரப்போகிற ஒன்றின் காரணமாயுமிருக்கிறது. இந்தக்கண்டறிந்த தொடர்பாகிய இவ்வித நிலையான சம்பந்தம் காரண காரிய நியாயமென்று வகுக்கப்பட்டிருக்கிறது. மனித அறிவு இந்த நியாயத்தை மூலாதாரமாய்க்கண்டறிந்து, அதில் ஊர்ஜிதமான உறுதியையும், ஒழுங்கையும் மானிட அபிவிர்த்தியையும் பார்க்கிறது.

நாம் அறியாமலும் அறிந்தும் சதா காரியங்களை உண்டுபண்ணிக்கொண்டேயிருக்கிறோம். நாம் எவ்வளவுக்கெவ்வளவு நம்முடைய சக்தியையும் பிரகிருதியின் நிபந்தனைகளையும் அறிகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் விரும்பும் காரியங்களை அடையவும் வெறுப்பதைத் தடுக்கவும் கூடும்.

மேற்குதேசத்துப் புலனறிவுசாஸ்திரி கர்மத்தை "காரியப்பிரதிகாரிய நியாயம்" என்கிறான். அவனும் இதை ஒரு மூலாகாரமானநியாயமென்று கொள்கிறான். "செய்கையும் எதிர்ச்செய்கையும் சமனும் எதிரிடையாயுமிருக்கிறது என்று சொல்லுகிறான்". ஒரு வஸ்துவை நீங்கள் எறிந்தால் எறிந்தமுகம் நோக்கி எதிர்த்துத்தாக்குதல் அதின் பிரதிச்செயலாயிருக்கிறது. ஒரு பலகையை நோக்கி நீங்கள் ஒரு ரப்பர்ப்பந்தை எறிந்தால் அந்த எறிதலுக்குச்சமத்வமான சக்தியுடன் உங்களிடம் திரும்பிவரும். அந்தப்புலனறிவுசாஸ்திரி பிரகிருதியில் எங்கும் இந்த நியாயம் இருப்பதைக் கண்டு அவன் செய்யும் காரியங்களிலெல்லாம் அதன் நிச்சயத்தைக்கண்டறிகிறான்.

மேற்குதேசத்தில் வழங்குகிற இவ்விருபெயர்களிலும் நியாயம் என்கிற பதம் காணப்படுகிறது. பிரகிருதிநியாயம் என்றாலென்ன? அது ஓர் கண்டறிந்த தொடர்பாயும் நிலையான காரணஸித்தியாகுங் கூடிய ஓர் விஷயம். அதை ஒரு சட்டமாயும் வைத்துக்கொள்ளலாம். உதாரணமாக, A என்பவனும் B என்பவனும் எங்கே சேர்ந்திருக்கிறானோ, அங்கே C என்பவனும் போகிறான். அதிலிருந்து அது சில நிபந்தனைகளைப் பொறுத்த சங்கதியாகவும், அவைகளிருந்துண்டாகிற முடிவாகவுமிருக்கிறது. அது ஒரு ஆக்ஞையல்ல, மனிதருடைய சட்டநிருபணத்தைப்போல் இதைச் செய், செய்யாதே என்று அது சொல்லுகிறதில்லை. நீ A என்பவனையும் B என்பவனையும் வரவழைத்துக்கொள்ளவேண்டும், ஆதலால் C என்பவனும் வரவேண்டும் என்று அது சொல்லுகிறதில்லை. ஆனால் உனக்கு C வேண்டுமானால் A என்பவனையும் B என்பவனையும் நீ சேர்க்கவேண்டும். உனக்கு C தேவையில்லையாயின், Aயும் Bயும் சேராதவிதம், பார்த்துக் கொள்ளவேண்டும். B என்பவனைவிட்டு A என்பவனை அப்புறம்

வைத்திருந்தால் நீ C என்பவனைப் பார்க்கமாட்டாய் என்று இவ்விதம் சொல்லுகின்றது. ஆகவே, ஒரு பிரகிருதி தர்மமானது உண்மையில் பலவந்தரான ஓர் சக்தியாயிருக்கவில்லையென்றும் ஆனால் சாதித்துக்கொள்ளுப்பலத்தை கொடுக்கும் ஓர் சக்தியாகவேயிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட காரியத்தை உண்டாக்கிக்கொள்ளவோ அல்லது தடுத்துக்கொள்ளவோ நீங்கள் சக்தியுள்ளவர்களாயிருக்குமாறு அது சில நிபந்தனைகளைப்பற்றிச் சொல்லுகின்றது. அந்த நிபந்தனைகளைச் செய்துகொண்டால் அதன் முடிவை நீங்கள் அடையத்தான் வேண்டுமென்பதுமாத்திரம் இவ்விஷயத்தில் முக்கியமானது. இது இப்படி தவிர்க்கவொண்ணாத காரணஸித்தியாயிருப்பதினாலே பாமரஜனங்கள் பிரபஞ்சவிதிகளில் அகப்பட்டுத் துன்புறுகிறார்கள். அவர்கள் அறியாமையால் நிபந்தனைகளை உண்டுபண்ணி, அதன் முடிவுகள் அவர்களைச் சூழ்ந்துகொண்டு, அவர்களைக்கலக்கிச் சின்னாபின்னப்படுத்துகின்றன. நாம் அறிவில் முதிர முதிர நாம் உற்பத்திபண்ணுகிற நிபந்தனைகளைப்பற்றி ஜாக்கிரதைகொண்டு, வெறுப்புற்ற விளைவுகளைத் தடுத்துக்கொள்வோம்.

ஒரு பிரகிருதி தர்மமானது மீறக்கூடாததென்று சொல்லப்படுகிறது, ஏனென்றால் காரணகாரியமிரண்டுக்குமுள்ள இவ்வித சம்பந்தம் மாற்றமுடியாதது பிரகிருதிதர்மங்களை நம்மிஷ்டம் போல் அவமதிக்கலாம், ஆனால் அந்த தர்மமானது நம்மைத்தகர்க்கிறதேயன்றி நாம் அதைத் தகர்க்கிறதில்லை. ஒரு கட்டடத்தின் உச்சியிலிருந்து நழுவி அபாயகரமாய் நீ பூமியில் விழுந்தால் பூமியின் ஆகர்ஷணசக்தியென்ற விதியை நீ தகர்க்கவில்லை. நீ அதை அவமதிக்கின்றாய் உன் வீழ்ச்சியானது அதன் உண்மையை ருஜூப்படுத்துகின்றது. ஒரு நன்கறிந்த விதியானது வேகத்தை உண்டுபண்ணி அதனால் நீ தரையில் மோதிக்கொள்கிறாய்.

நாம் இனி கர்மமென்றால் என்ன? என்ற நமது முதற்கேள்விக்கு நாம் கூறப்போகும் விஷயத்தினால் ஒருவாறு பதிலளிப்போம். அதாவது கர்மமென்பது எங்கும் ஒரேவித உறுதியுடன் கூடிய பிரகிருதிதர்மம். அதற்கு மேற்குதேசங்களில் காரணகாரியநியாயம் அல்லது காரியப்ரதிகாரியநியாயம் என்று பெயர்.

கர்மமென்றால் என்ன? என்ற இந்தக் கேள்வியின் மற்றுமுள்ள விடை "கர்மம் எப்பொழுது உண்டானது" என்ற இரண்டாவது கேள்வியுடன் நெருங்கிய சம்பந்தம் பெற்றதாயிருக்கிறது. ஒரு பொதுவான பிரகிருதி கர்மத்திற்கு உற்பத்தியாவது முடிவாவது உண்டென்று சொல்லமுடியாது. எங்கே தோற்றமுண்டோ எங்கே ஜகத் உலகம் இவைகள் உண்டோ அங்கே பொதுவான தர்மங்கள் வஸ்துக்களின் இயற்கையான சுவபாவத்திலேயே குப்தமாயிருக்கின்றன. வஸ்துவின் ஒரு கட்டிக்கும் மற்றொரு கட்டிக்குமுள்ள ஆகர்ஷணசக்தியானது ஒரு காலத்தில் உண்டானதென்று சொல்லமுடியாது. எங்கே வஸ்துவின் கட்டிகளுண்டோ அங்கே ஆகர்ஷணசக்தியும் தொழிற்படும். கீழ்க்கதிசக்தியும் ஒரு காலத்தில் உண்டானதல்ல. அது தொழிற்படக்கூடிய நிபந்தனைகள் எங்கே இருக்கின்றனவோ அங்கே அதுவும் எப்பொழுதும் இருக்கிறது. ஆகவே கர்மம் என்பதும் ஒரு பொது தர்மமானதால் அது அநாதியாயுள்ளது. அது வியஷ்டியான ஜகத்தின் ஓர் நிபந்தனை. எங்கே ஜகத்தோற்றமுண்டோ அங்கே கர்மமும் உண்டு.

ஆகையால் "கர்மம் எப்பொழுதுண்டானது?" என்ற கேள்வியானது கர்மம் என்பதின் இயற்கையான சுவபாவத்தைப்பற்றிய நாம் கொண்டிருக்கும் ஓர் தப்பெண்ணத்தைக் குறிப்பிடுகிறது. அது பிரகிருதியில் எப்போதுமுள்ள நிலைமை, ஆதியந்தமில்லாமல் நித்தியமானது. இந்தக் கேள்வியின் விதத்தைமாற்றி, "ஒரு குறிப்பிட்ட ஜந்துவின் கர்மம் எப்பொழுதுண்டானது?" என்று கேட்டால் அதற்கு பின்வருமாறு விடையேற்படுகிறது. "அந்தக்குறிப்பிட்ட ஜந்து எப்போது விபக்திக்குவந்ததோ அந்தக் காலத்தில்" என்பது மறுமொழி. பிறப்பிறப்பில்லாத அந்த ஆத்மா எப்பொழுது பிரகிருதியின் போர்வையை தரித்துக்கொண்டானோ அப்பொழுதே அவன் நிபந்தனைக்குள்ளாகி கர்ம நியதியின் கீழ் வந்துவிடுகிறான். நிபந்தனைக்குட்போவதே அவனுடைய குறிப்பிட்ட கர்மத்தை ஆரம்பிப்பதாகும். முதலில் அது ஒரு தாதுவர்க்கத்துக்குரிய கர்மமாயிருந்து அவனைச் சுற்றியுள்ள சக்தி, வஸ்து இவைகளால் அவனுக்கு நேரும்

சலனங்களாயும் அவனால் சுற்றியுள்ளவைகளுக்கு ஏற்படும் எதிர்ச்செய்கைகளாகவுமே அப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கும். இந்தச்செய்கைகளும்பிரதிச்செய்கைகளுமே அவனுடைய கர்மக்கட்டுகளைப் பின்னுகின்றன. அந்தச்சங்கிலியானது அவனை ஓஷதிவர்க்கத்தின் ஏதாவதொருவகைக்குள் இழுக்கிறது. அவ்விடத்தில் அவனுடைய எதிர்ச்செய்கையானது வர வர அதிகமாய்ப்பெருகவே, அவனை ஒட்டியுள்ள கர்மவலையானது அதிகப் பின்னலாகி அவனை ஏதாவதொரு பிராணி வர்கத்துக்கு உயர்த்துகின்றது. அப்பிராணிவர்கத்தில் அவனது பெருகிக்கொண்டிருக்கும் உணர்ச்சியானது கர்மத்தின் காரணங்களுள் பிரவேசித்து அவன் செய்யும் துன்பங்கள் அவனுக்கே துன்பங்களாகத் திரும்புகின்றன. ஆனால் துன்ப உணர்ச்சியானது அவனிடத்தில் உணரும் சக்தியின் மலர்ச்சியைப்பொறுத்ததாயிருக்கிறது. அது இன்னமும் செய்கையும் எதிர்ச்செய்கையுமாகவேயிருக்கிறது. ஆனால் இவைகள் தாதுவர்கத்தில் உணர்ச்சியோடு சேர்ந்தவைகளாயில்லை. பிராணிவர்கத்திலோ உணர்ச்சியானது இன்ப துன்பங்களில் முடிகின்றது. தர்மம் ஒன்றுதான்; ஐந்துதான் வேறு. ஆதலால் அந்த ஐந்துவில் உண்டாகிற விளைவும் வேறாகவேயிருக்கிறது. பிரக்ஞையானது அபிவிருத்தியடையவே, அந்த கர்மவலைக்கு இன்னொரு கயிறு சேர்க்கப்படுகிறது. மனோவுலகத்தின் செய்கையும் ஸ்தூலலோகம் இச்சாலோகம் இவைகளின் செய்கையோடு சேர்க்கப்படுகிறது. இப்படி இன்னொரு வலிமையுள்ள அம்சமானது அந்தப்பிரதிச்செய்கையோடு சம்பந்திக்கிறது. ஆனால் மறுபடியும் காரியப்பிரதிகாரிய நியாயம் அதே வழிகளில் வேலை செய்துகொண்டிருக்கின்றது.

கர்மமென்பது செய்கையும் எதிர்ச்செய்கையுமாயிருக்கிறதென்றும், பிரகிருதியின் ஒவ்வொரு பிரக்ஞாபூமியிலும் இது நடைபெறுகிறதென்றும், எல்லாவிடங்களிலும் எப்போதும் வேலைசெய்கிறதென்றும் வஸ்துக்களின் சுவபாவத்திலேயே இயற்கையாயுள்ளதென்றும் வித்யார்த்தியானவன் தன் மனதில் சதா வைத்துக்கொண்டிருப்பானானால் அவனுடைய அநேக

சங்கடங்கள் அகன்றுவிடும். இந்தப் பிராகிருத ஜகத்தில் அவன் எப்போது இறங்கினானோ அப்பொழுதே கர்மமானது அவனிடத்தில் ஆரம்பிக்கிறதென்று அறிந்துகொள்வான். ஏனென்றால் அவன் கர்மத்தின் தொழில் சதா நடந்துகொண்டிருக்கிற விபந்தனைகளுக்குள் வந்துவிட்டான். அவனிடத்தில் வருகிற எதிர்ச்செய்கைகளும் அவனிடத்திலிருந்தே வெளிப்பட்ட செய்கைகளுக்குச் சரியாய் ஏற்றத்தாழ்ச்சியான அம்சங்களைக்கொண்டு அவனுடைய செய்கைகளுக்குச் சரிசமானமாயிருக்கின்றன.

இன்னொரு விஷயமும் அவன் கண்டுகொள்வான். அதாவது: செய்கையின் தன்மையைப்போலவே எதிர்ச்செய்கையின் தன்மையும் இருக்கவேண்டுமென்பதுதான். ஆதலால் ஒருவன் ஒரு நல்ல உத்தேசத்தோடு ஒரு தவறுதலான காரியத்தைச்செய்தால் அவனுடைய செய்கையானது ஸ்தூல ஸூக்ஷ்ம மானஸீக உலகங்களாகிற மூன்றுலகங்களிலும் தொழிற்படுகின்றது. அதன் எதிர்ச்செய்கையுங்கூட மூன்று உலகங்களிலும் தொழிற்படவேண்டும். மனோசம்பந்தமான எதிர்ச்செய்கையானது அவனுடைய குணத்தில் நிற்கும். அந்த குணம் நன்மையின் தாக்குதலால் அபிவிர்த்திபடையும். இச்சாஸம்பந்தமான எதிர்ச்செய்கையானது சரியான இச்சையை உண்டுபண்ணக்கூடிய சமயம் இனி அவனுக்கு ஏற்படச்செய்யும். இவ்விரண்டும் நல்லவைகளாகவேயிருக்கும்; ஆனால் அந்தத் தவறுதலானசெய்கை நடந்தவிடமாகிய ஸ்தூலவுலகத்தில் ஏற்படுகிற எதிர்ச்செய்கைமாத்திரம் அவனுக்கே இடையூறாயிருக்கும். இவ்விதமாக அந்த தர்மமானது முழு நிதானத்துடனும் மீறக்கூடாதவிதமாயும் நடைபெறுகிறது. ஒவ்வொரு செய்கையின்மீதும் உண்டாகிற எதிர்ச்செய்கையும் மாறாத தொடர்பாகவே பின்பற்றுகின்றது.

கர்மநியாயத்தின் வேலைகளுக்குள், வெகுமதிகளும் தண்டனைகளும் உண்டென்கிற அபிப்பிராயம் பிரவேசிக்க விடக்கூடாது. நமக்கு விளைவுகளும் பலன்களும் இருக்கின்றன. ஆனால் வெகுமதிகளாவது தண்டனைகளாவது இல்லை. எந்தவுலகத்திலாவது தவறுதலான செய்கை செய்தால் அதிலிருந்துண்டா

வது துன்பம். ஒரு தண்டனையாக யாரேனும் நமக்குத் துன்பத்தை உண்டுபண்ணுகின்றாரென்பதல்ல. ஆனால் நாமாகவே நியாயத்திற்கு விரோதமாய்ப்போய், அந்த உறுதியான நியாயத்திற்கெதிரே நசுக்கப்படுகிறோம். நல்ல எண்ணம் நல்ல உணர்ச்சி இவைகளின் பலனாக நல்லவர்களாயிருக்கும் சக்தி அதிகரிக்கிறது. அது இம்மையிலாவது மறுமையிலாவது க்ஷேமகரம் என்பதல்ல. நாம் ஒரு பொய் சொன்னால் அதனால் நாம் அதிகப்பொய்மைக்குப் போக எதுவும் நம் குணத்தாழ்வும் உண்டாகின்றன. இது ஒரு மாறாதகாரியம். நம்மைச்சூழ்ந்துள்ளவர்களால் நம்முடைய பொய் கண்டுப்பிடிக்கப்படுகிறதினாலாவது மற்றப்படியாவது அந்தக்காரியம் பாதிக்கப்படுகிறதில்லை. நம்முடைய பொய்யை அவர்கள் கண்டுபிடிப்பதிலிருந்து அவர்களுக்கு நம்பிக்கையின்மை ஏற்படுகிறதே அதின் எதிர்ச்செய்கையாகும். நம்மிடத்தில் பொய் வரவர அதிகமாகிறதென்கிற எதிர்ச்செய்கைக்கும், இந்த இரண்டாவதாய்ச்சொன்ன காரியத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

“கர்மநியாயமானது நம்மை எவ்வளவுதூரம் கட்டுப்படுத்தும்?” என்ற கேள்வியை இப்போதெடுத்துக்கொண்டு விசாரணைசெய்வோம். அது இயற்கையில் இரண்டுபாகமாய்ப் பிரிகிறது; ஒன்று பிரகிருதிதர்மங்களுடைய கட்டுப்படுத்தும் செய்கை, அதில் கர்மமும் ஒரு தர்மம். இரண்டாவது நாம் ஒவ்வொருவரும் சென்றகாலத்தில் உண்டாக்கிக்கொண்ட தனிக்கர்மத்தின் பந்தப்படுத்தும் செய்கை.

(1) ஒரு பிரகிருதிதர்மமானது சில நிபந்தனைகளின் தொடர்பு என்று ஏற்கெனவே நாம் பார்த்திருக்கிறோம். எந்த நிபந்தனைகளுக்குள் நாம் வந்தோமோ அந்த நிபந்தனைகள் நம்மிடத்தில் சில எல்லைமானங்களை ஏற்படுத்துகின்றன. இப்படியே ஒரு மனிதன் சாதாரண நிபந்தனைகளின்கீழ் ஆகாயத்திற் பறக்கமுடியாது. அவன் அப்படி ஆகாயத்தில் பிரயாணப்போக விரும்பினால், தான் ஆகாயத்தில் கிளம்பி சுலபமாய்ப் போகும்படியான ஏதாவதொரு உபகரணத்தைத் தேடிக்கொள்ளவேண்டும். நம்மைச் சூழ்ந்துள்ள பிரகிருதியின் சக்திகளை, எவ்வளவுக்கெவ்வளவு அறிகிறோமோ

அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக நம் சுவயற்சியானது அவைகளின் மத்தியில் நடைபெறுகின்றது; ஏனெனில் நாம் செல்லவிரும்பும் பாதைக்கு இடைஞ்சல்களாயுள்ளவைகளை சாந்தப்படுத்திக்கொண்டு, நாம் ஒன்றுக்கொன்று சீர்படுத்த முடியும். ஒரு கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே குதித்துப் பூமியில் இறங்க விரும்பினால் சாதாரணமாய் ஆகாயத்தில் குதிக்கும் பக்ஷத்தில், அந்த நிபந்தனைகள் நம்முடைய எலும்புகளுக்குச் சிதைவு உண்டுபண்ணக் கூடியவைகளாயிருக்கின்றன. ஆனால் போதுமான விசாலத்தோடு கூடிய ஓர் குடைபோன்ற கருவியை உபயோகப்படுத்திக்கொண்டால் ஜாக்கிரதையாய் ஆகாயத்தில் கிளப்பி பூமியை நோக்கி மெல்லமெல்லப் பறந்துவரலாம். அப்படியே நாம் வாயுமண்டலத்துக்குமேலும் செல்லமுடியாது. அதன் மேல்பிரதேசங்களை அடைவதற்கு வெகுதூரம் முந்தியே நாம் சுவாசம் விடப்போதுமான வாயு அங்கு இராது; இது ஒரு எல்லைப்படுத்தும் நிபந்தனை; ஆனாலும், சுவாஸயோக்யமான கொஞ்ச வாயுவை எடுத்துக்கொண்டு போவதினால் இந்த எல்லையையும் தாண்டிவிடலாம். நம்மை எல்லைப்படுத்தும் பிரகிருதியினுடைய நிபந்தனைகளின் சக்தியை அறிவால் பெரும்பாகம் தாண்டிவிடலாம் நம்முடைய அறிவு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சுவதந்திரமாய் நாம் வேலைசெய்யலாம். கர்மமென்று சொல்லப்படுகிற சர்வவியாபகமான நிபந்தனைகளைப் பொறுத்தும், மேற்சொன்னபடியே உண்மையானது. பிரகிருதியிற் காணப்படுகின்ற மற்ற நிபந்தனைகளினால் நாம் எவ்விதம் எல்லைப்படுத்தப்படுகிறோமோ அவ்விதமே இந்தக் கர்மநியாயம்பற்றிய நிபந்தனைகளாலும் எல்லைப்படுத்தப்படுகிறோம்; ஆனால் அறிவினால் நாம் இவைகளை சாந்தப்படுத்தவோ அல்லது பெரும்பாகம் தாண்டிச்செல்லவோ கூடும் ஆகவே நம்முடைய சுவயற்சியானது நம் அறிவின் அளவைப் பொருத்ததாயிருக்கின்றமையால், பொதுவான கர்ம நிபந்தனைகளைப்பற்றிப் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டுமென்பது மிகவும் அத்யாவசியகம்.

2. அதிக நெருக்கிடையானதும், தற்சமயம் பிரதானமாயுமுள்ளது, சென்ற காலத்தில் நாம் ஒவ்வொருவரும் உண்டுபண்ணி

க்கொண்ட குறிப்பிட்ட கர்மத்தின் எல்லைப்படுத்துகின்ற செய்கையாகும். இதைப்பற்றிய அறிவு நம் வாழ்க்கையின் க்ஷேமத்திற்கும் நம் ஒழுக்கத்தை அடக்கியாளவும் மிகவும் அவசியமானது. இந்த அறிவானது அடியிற் கண்ட மூன்று வழிமுறைகளால் கர்மத்தைப்பற்றிப் படித்துப் பெறத்தக்கது. அதாவது: சீலம், சமயம், சந்தர்ப்பங்கள். இவைகள் அறிவின் மூன்று நிலைகளான முறையே பாவம், கர்மம், கிரியை இவைகளால் உண்டாக்கப்படுகின்றன. இதைப்படிக்கும்போது சென்றகாலத்தில், நம்முடைய பாவத்தாலும், கர்மத்தாலும் கிரியையாலும் இந்தக்கர்மாவை உண்டு பண்ணின நாமே, இப்போது பாவிக்கிறவும், இச்சிக்கிறவும் செய்கிறவுமான உணர்ச்சியாயிருக்கின்றோமென்பதை, ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஜனங்கள் கர்மமானது தங்கள்பேரிலேற்பட்ட எதிர்ச்செய்கையென்று விசேஷமாய் நினைக்கின்றார்களே தவிர கர்மத்தின் நிபந்தனைகளின் பேரில் தாங்கள் செய்யவேண்டியதைப்பற்றி போதுமான அளவு நினைத்துப்பார்ப்பதில்லை. முந்தின பாவனைகளினால் உண்டானதை, இப்போது பாவனைசெய்வதாலும், முந்தின இச்சைகளால் உண்டானதை இப்போதைய இச்சையினாலும் முந்தின செய்கைகளால் உண்டானதை இப்போது செய்யும் செய்கைகளாலும் நாம் மாற்றிக்கொள்ளுகிறோம். கர்மத்தின் காரியமானது ஒரு அசேதனமான சுவற்றின் மேல் ஏற்படவில்லை; ஆனால் அது ஜீவனோடுகூடிய உணர்ச்சியில் ஏற்பட்டு அந்த ஜீவ உணர்ச்சியின் எதிர்ச்செய்கையால், கர்மமானது மாற்றமடைகிறது. கர்மத்தை ஜனங்கள் முயற்சியின்றி ஸஹிக்கிறார்களே தவிர அதை தீவிரயத்னத்தால் தடுப்பதைக்காணோம் ஒரு தலையானவும் தப்பானவுமான அபிப்பிராயம் கொள்ளப்பட்டு, மனிதன் சுறுசுறுப்புள்ளவனாயிருப்பதற்கு பதிலாக செயற்சோர்வுள்ளவனாக்கப்படுகிறான்.

மேலே சொன்ன முறைகள் ஒவ்வொன்றையும் சோதித்தால் கர்மம் நம்மை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தும் என்பதைத்தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம்.

பாவம், சீலத்தை உண்டுபண்ணுகின்றது. இந்தச்சங்கதி மிகச் சாதாரணமாயும் உண்மையாயும் இருக்கிறது ஒருவன் நினைப்

பது போலவே ஆகிறன். முன் ஜன்மங்களிற்கொண்ட பாவத்தால் உண்டுபண்ணிக்கொண்ட சிலவே இந்த ஜன்மத்தில் நம்மோடு பிறந்திருக்கிறது, அதிலிருந்து தப்ப நம்மால் முடியாது; அது ஓர் நிச்சயமான எல்லையாகும். நாம் அற்ப மனுஷசக்திகளுடன் பிறந்திருக்கிறோமென்று வைத்துக்கொள்வோம்; நாம் அறிவை அடைவதில் இவைகள் நம்முடைய வல்லமையை எல்லைப்படுத்துகின்றன. புத்திசாலியான நம்முடைய அயலான் ஒரு பாடத்தைக் கற்பதில் பத்துநிமிஷம் செலவு செய்தால், நாம் இரண்டு மூன்று மணிநேரம் செலவு செய்வது அவசியமாகிறது. இது சந்தேகமில்லாமல் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற ஓர் உண்மை, இதுவோர் எல்லை வரம்பு. அதனோடு நாம் நடந்துகொள்வது எங்ஙனம்? தற்போது, நடைபெறும் காரியமான உண்மையில் உடன்படுவோம்; அது நம்முடைய கர்மம். ஆனால், நாம் நியதியை அறிந்துகொண்டால், உடனே நம்முடைய சக்திகள் பூரணமாய் இருக்கும்படி அவைகளை பயிற்சி செய்யத்தொடங்குவோம்.

நம்மால் இயன்றவரையில் முயற்சித்து, சக்தியிற் குறைவாயிருக்கிறதை, காலக்கிரமத்தில் நிறைவுபடுத்துவோம். வரவர எல்லைகள் விசாலப்பட ஆரம்பிக்கும் ; சுபாவமாக நமக்கிருக்கக்கூடிய சக்தியை அதிகப்படுத்தும். நம் இடைவிடா அப்பியாசத்தினால் நம்முடைய மனோசக்திகள் அதிகரிக்கும். சென்ற காலத்தில் அற்பமாய்ப் பாவனைசெய்ததால் ஏற்படுத்திக்கொண்ட எல்லை வரம்பை ஏற்றுக்கொண்டு, இப்போது அதிக நன்றாய்ப் பாவனை செய்வதினால் அதனுடைய அபிவிருத்தியில் ஜாக்கிரதையாய் வேலை செய்து இவ்விதம் படிப்படியாய் வருங்கால உபயோகத்திற்கு அபிவிருத்தியடைந்த ஒரு மனோசக்தியை உண்டுபண்ணிக்கொள்வோம் அல்லது நாம் ஒரு முன்கோப சுபாவத்தோடு பிறந்திருக்கலாம்; ஒரு சாந்தகுணமுள்ள அயலானோடு நம்மை எதிரிட்டு நோக்கினால், நம்முடைய தாழ்மையை நுட்பமாய் அறிந்தவர்களாவோம்; இங்கு நம்முடைய கர்மபந்தத்தை உணருகின்றோம். ஆனால் நாம் மறுபடியும் அதற்குட்பட்டு சோம்பலிருக்க மறுக்கிறோம். எம் முடிவில் அதை ஓர் வைராக்கியமாகச் செய்துகொள்ளுகிறவரையில், நாம் தீர்மானமாகப் போ

றுமையை பாவனை செய்கிறோம். அப்போது அது நம்முடைய
வழக்கமான சுவபத்தேற்றமாக ஆகிவிடும். கர்மமானது, செ
ன்றகாலத்திற்காக நமக்கு எல்லைக்கட்டுகளாகிய கூவியைக் கொ
டுக்கலாம்; ஆனால் அவைகளைப்பிளந்துகொள்ள நாம் துணிவுக
ரமாய்த் தீர்மானித்தால், அந்த எல்லைக்குள்ளேயே நம்மைவைத்
திருக்க அதனால் முடியாது. அந்த எல்லைகளுக்குள்ளிருந்து
தான் ஆரம்பிக்கவேண்டும், ஆனால் அவைகளை உண்டுபண்ணின
அதே சக்தியாலேயே நாம் அவைகளை மாற்றக்கூடும்.

கர்மம் சமயத்தை உண்டு பண்ணுகின்றது. இது இரண்டாவ
தாய் அறிந்த நியதி. நாம், புத்திசாலியாய்ப் பிறந்திருக்கலாம்;
ஆனால் நம்முடைய சக்தியைக்காட்ட சந்தர்ப்பம் இல்லாமலிரு
க்கலாம். அல்லது நம்முடைய சொந்தக்காரியகுறைவினால் ஏற்
படுவதைவிட துரதிருஷ்டத்தினாலேயே நம் பிரயத்தனங்கள் ப
யனற்றுப்போகலாம் நிச்சயமாய் நாம் இங்கும் ஓர் எல்லைக்குள்
அடைக்கப்பட்டிருக்கிறோம். கர்மமானது நம்முடைய காரியங்க
ளுக்கு விக்கினம் உண்டுபண்ணுகின்றது இங்கேயும் நாம் அந்த
எல்லையை, பின்வாங்காத இடைவிடா முயற்சியினால் எதிர்கொள்
ளவேண்டும் நம்முடைய முயற்சியை பலமான பாவனையால் ஆத
ரித்து, நம் பிடிக்கு அகப்படாமல் ஏமாற்றிக்கொண்டிருக்கும் ஜய
த்தை உறுதியாய் சிந்திக்கவேண்டும். படிப்படியாய் நாம் சமயங்க
ளை உண்டுபண்ணிக்கொண்டு, நம் விதியையும் ஜயிப்போம்; எல்லை
வரம்புகளும் விசாலப்பட்டுக்கடைகளும் தோன்றுதொழியும்.

மூன்றாவதான நியதி, "கிரியை சந்தர்ப்பங்களை உண்டுபண்ணு
கின்றது" என்பதே. சந்தர்ப்பங்களால் ஏற்படுத்தப்பட்ட எல்
லைக் கட்டுகளே எல்லாவற்றிலும் மிகக்கஷ்டமானவைகள்; ஆ
யினும் இவைகளையும் கொஞ்சங்கொஞ்சமாய் மாற்றிக்கொள்
ளலாம். அதற்கு மகாசிலாக்கியமானவழி, அந்த எல்லைவரம்புக
ளுக்குள்ளே நம்மைப் பொருத்திக்கொண்டு அவைகளை உற்சா
கத்துடனும் தைரியத்துடனும் ஏற்றுக்கொள்ளுவதேயாம் ஆர
ம்பத்தில் அவைகளிலிருந்து தப்பமுடியாவிடினும், அவைகளைக்
கொஞ்சங்கொஞ்சமாய் மாற்றக்கூடிய ஒரு அமைதியும் உறுதியு
முள்ள அடக்கருணத்தை ஆதரிப்பது சிறந்ததாகும். எல்லாவ

றையும்விட நம்முடைய நன்மையை அதிகம் எண்ணாமல், நம்மைச் சூழ்ந்துள்ளவர்களின் க்ஷேமலாபங்களை விருத்திசெய்ய நாம் முயலவேண்டும். ஏனென்றால், முந்தியசுயநயம் இப்போதைப் துன்பத்தை உண்டுபண்ணியிருக்கிறது; காரணத்தை மாற்றுவதினால் காரியமும் மாறிவிடும். இப்போதுள்ள நிலைமையிலிருந்துகொண்டு, வருங்காலத்தன்மையின் விதைகளை விதைக்கிறோம். முன் செய்யப்பட்ட எல்லைவரம்புகளுக்குள்ளிருந்துகொண்டே வருங்காலத்து அபிவிருத்தியை உண்டுபண்ணிக்கொள்கின்றோம்.

"விதியைவிட மதி பெரிது" என்ற, பீஷ்மாசாரியாரின் திருவசனத்தின் நோக்கத்தை, நாம் அடுத்தபடி விசாரிப்போம். முந்திய முயற்சிகள் இப்போதுள்ள விதியை உண்டுபண்ணியிருக்கின்றன. இப்போதைய விதியை புதியமுயற்சிகளால் மாற்றிக்கொள்ளலாம். அவ்விதமாறுதலின் நிபந்தனைகளைத் தெரிந்துகொண்டால், "கர்மநியாயமானது நம்மை எவ்வளவுதூரம் கட்டுப்படுத்தும்" என்றகேள்வியின் உத்தரம் பூர்த்திபெறும்.

"பாவம் சீலத்தை உண்டுபண்ணுகிறது" என்பது நமக்குத் தெரியும். நம்முடைய சொந்த சீலத்தையே உற்றுநோக்கி, சத்தியம், தைரியம், சாந்தம் இவைகளில் குறைவாயிருக்கிறோமென்று அறிகிறோம். நாம் அசத்யமுள்ளவர்களாயும் தைர்யமற்றவர்களாயும், கோபக்குணமுள்ளவர்களாயும் இருப்பது நமது கர்மத்தினால் ஏற்பட்டிருப்பதால், இந்தக்குறையை நாம் எவ்விதம் நிவர்த்திசெய்வோம். நம்முடைய குறையை நிவர்த்திப்பதற்கு மாலையோ காலையோ ஆகிய ஒவ்வொருநாளும் வேளையில் நாம் ஐந்துநிமிஷம் அமைதியாய் அமர்ந்து, சத்தியத்தைப்பற்றிச்சிந்தனைசெய்வோம். "சத்தியமே பிரம்மம், ஒவ்வொன்றும் அந்த சத்தியத்தையே அதிஷ்டானமாயுடையது, நான் ஈசுவராம்சமாயிருப்பதால் என் யதார்த்தமான ஆத்மாவில் நான் ஸத்தியமாயிருக்கிறேன், என் மனது என் சரீரம் இவைகள் என்னுடைய யதார்த்தஸ்வரூபத்தையே வெளிப்படுத்தவேண்டும். இன்றைக்கு நான் ஸத்தியமாயும் சரியாயும் நினைப்பேன், ஸத்தியமில்லாதயாதொன்றும் பேசமாட்டேன், அஸத்தியமொன்றும் நினைக்கவும் செய்யமாட்டேன், ஸத்யஸ்வரூபியாயும் என்னுடைய ஆ

த்மாவாயுமிருக்கிற பரம்பொருளே! ஸத்தியமாக என்னிடம் வெளிப்பிரகாசித்து, நான் உண்மையாய் நடக்கும்படி எனக்கு உதவி புரி,'' என்று இவ்வாறு நாம் ஸ்மரிப்போம். பிறகு நாம், அன்று முழுவதும் அஸத்யமாய் நினைக்காமலும், பேசாமலும், கிரியை செய்யாமலும் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க முயலுகின்றோம்.

நாம் எதையேனும் யதார்த்தத்தை மிஞ்சிப்பேசினால் காலையிற்செய்த நம்முடையபாவமானது நம் மனதில் தோன்றி நாம் அஸத்தியமாயிருந்ததாக உடனே உணருவோம். அவ்விஷயத்தில் நாம் அந்தப்பொய்யான சங்கதியைத் திருத்திக்கொள்ளக் கொஞ்சம் வெட்கப்பட்டாலும், அதை நாம் கருத்தாயும் வெளிப்படையாயும் திருத்திக்கொள்ளவேண்டும்; இது மறுசமயம் நம்மை அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாகச்செய்யும். இவ்விதமாக நாம் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வாரமும், மனோவாக்குக்காயங்களில் சத்தியமான பழக்கம் ஏற்படுத்திக்கொள்ளும்வரையில், நாம் பயிலவேண்டும் பிறகு, நாம் இயற்கையில் சத்தியமுள்ளவர்களாயிருக்கிறோமென்றும். நம்மிடமுள்ள குறைவு மறைந்துவிட்டதென்றும், சத்தியதர்மமே நமக்குச்சொந்தமென்றும், நாம் கண்டு ஆனந்திப்போம்.

பிறகு, மறுபடியும் ஒருதரம் தீரத்தன்மையை உண்டாக்கிக்கொள்ள ஆரம்பிக்கிறோம். அதைப்பற்றிக்காலையில் சிந்தனை செய்து அன்றுமுழுதும் அதை அப்பியஸிக்கிறோம். நாம் தைரியமில்லாதவர்களாய் உணரும்பொழுது "பிரம்மம் நிர்ப்பயமானது, என்னுடைய ஆத்மா நிர்ப்பயமானது, என்னுடைய மனம், சரீரம் இவைகளும் தைரியமுள்ளதாய் இருக்கவேண்டும்'' என்று நாமே சொல்லிக்கொள்கிறோம். தைரியசாலிகளைப்பற்றிப்படித்து தீரத்தன்மையின் மகிமையைப்பற்றிப் புகழ்கிறோம். ஒரு குழந்தையாவது ஒரு மிருகமாவது குரூரமாய் நடத்தப்படுவதைப்பார்த்தால், நாம் வழியைவிட்டு மறைந்துபோய் "அது என் காரியம் அன்று'' என்று சொல்லமாட்டோம். நாம் துணிவுகரமாய்ப் புறப்பட்டுப்போய் அந்தக்கொடுமையுள்ள மனிதனிடம் சாந்தமாயும் திடமாயும் பேசி, அவன் குரூரமாய் நடத்திக்கொண்டிருக்கிற அந்தத் துணையற்ற ஜந்துவைக்காப்பா

ற்ற முயலுவோம். கொஞ்சகாலத்தில், அந்தக்கோழைத்தனம் மறைந்துபோய் நாம் தைரியசாலிகளாய் ஆகிவிட்டதாயறிவோம்.

பிறகு, மறுபடியும் நாம் இன்னொருமுறை கோபகுணத்திற்குபதிலாக சாந்தகுணத்தைப் பிரதிகரிக்க ஆரம்பிக்கிறோம். பிரதிகாலையிலும் சாந்தகுணத்தை சிந்தனை செய்கிறோம் அன்று முழுவதும் அதை அனுஷ்டிக்கிறோம். யாரேனும் நம்மிடம் கடுமையாய்ப்பேசி நம்முடைய முற்கோபகுணம் திடீரென்றுண்டாகி ஜொலித்தால், நாம் பதில் சொல்லாமல் மௌனமாயிருக்கப் பலவந்தம் செய்துகொள்கிறோம். இதை நாம் பிரயாசையின்றிச்செய்யக்கூடுமானால், பிறகு மற்றவனுடைய குழப்பவுணர்ச்சிகளைத் தணிக்க, சாந்தமாக பதிலுரைக்கத்தொடங்குவோம். கடைசியாக நாம் ஆத்திரம் கோபம் இவைகளில்லாமல் எவ்விதத்தீங்கையும் சகிக்கக்கூடும்.

பிராதக்காலத்திற் சிந்தனை செய்யத்தகுந்த இன்னொரு மிகவும் நல்லமுறை, நம்மைப் பூரண ஸத்தியவந்தர்களாயும் பூரண தீரர்களாயும், பூரண சாந்தமுள்ளவர்களாயும் நினைத்துக்கொள்ளுவதேயாம். மனோபாவனையானது சிருஷ்டிசெய்கிறது; நாம் எப்படியிருக்கவேண்டுமென்று பாவித்துக் கொள்ளுகிறோமோ அந்த தர்மத்தின் ஸ்வரூபமாய் ஆகிறோம். ஸத்தியம், தைரியம், சாந்தம் இவைகளுடன் கூடின ஓர் பூரண சுத்தவீரனைப் பாவனைசெய்தால், நாம் பாவித்தபடியேயாகிறோம். பாவனாதர்மத்தின் இவ்வித பிரயோஜனத்தினால், நாம் புதியகர்மத்தை உண்டுபண்ணிக்கொண்டோம். ஸத்தியவந்தனாயும், தைரியவானாயும் சாந்தசித்தனாயும் இருக்கும்படி நம்முடைய கர்மம் ஆகிவிட்டது நாம் இதை நம்முடைய நிச்சயசீலமாக ஏற்படுத்திக்கொண்டோம். மறுதரம் பூமியில் ஜன்மமெடுக்கும்போது, அத்துடன் பிறப்போம். கர்மமானது, அஸத்தியம், அதைரியம், கோபம் இவைகளுடன் கூடிய ஒரு சுவபாவத்தை நம்முடன் உலகத்திற்குக் கொண்டுவந்தபடி நம்மைப் பிறக்கச் செய்யலாம்; ஆனால் அந்தசுவபாவத்தை வைத்துக்கொள்ளும்படி பலவந்தம் செய்ய அதனால் முடியாது நாம் இச்சிக்கிறபடி செய்ய நம்மால் முடியும் ஸத்தியம், தீரம் சாந்தம் இவைகளுடன் கூடின

ஒரு சுவபாவத்தை உண்டுபண்ணத் தகுந்த காரணங்களை நாம் உண்டுபண்ணினால், அவ்வித சுவபாவத்தையே கர்மமானது நமக்களிக்கும். கர்மமென்பது வெறும் முடிவுதான் ஒரு சீலமானது சில காரணங்களின் மாறாத காரியமாயிருப்பதுபோலவே, மற்றசீலமும் அததற்குள்ள காரணங்கள் உண்டாகும்படி நாம் தேர்ந்தெடுத்துக்கொண்டால் அதேவிதமே மாறாத காரியமாகின்றது

"கர்மம் சமயத்தை உண்டுபண்ணுகிறது" என்று நாம் அறிந்திருக்கிறோம். ஸ்திரம் குன்றிய விஷயங்களை விடுத்து அதிக ஸ்திரமாயுள்ளவைகளையே தேடிக்கொண்டும், ஸ்தூலவிஷயங்களைவிட்டு புத்திசம்பந்தமானதையும் மனோசம்பந்தமானதையுமே தேடிக்கொண்டும், நமக்கு உண்மையில் உபயோகமுள்ள வஸ்துக்களைப்பற்றிக் கவலையாயும் அமைதியாயும் நினைக்கிறோம். பிறகு நாம் மகா அனுகூலமான விஷயங்களையே விரும்பும்படி கருத்தாய் நம்மை அமைத்துக்கொள்ளுகிறோம். நாம் அவைகளை உறுதியாயும் இடைவிடாமலும் இச்சித்து, நம் இச்சையானது நமக்காகச் செய்துகொண்டிருக்கிற சந்தர்ப்பங்களை கவனித்துக்கொண்டிருந்து, அவைகள் தோன்றினவுடன் பிடித்துக்கொள்கிறோம். அந்த நியதியானது முறைதவறாமல் வேலை செய்கிறதென்பதையும், நாம் நிர்ணயமாய் உண்டுபண்ணின சமயம் நாம் கோரியபொருளுடன் நம் கைக்குக் கிட்டுவதைத் தப்பாமற்பார்ப்போம் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வோம். கெடுதலாய்த் தேர்ந்தெடுத்துக்கொண்டால், அது திருப்தியையும் சுகத்தையும் உண்டுபண்ணாமல், ஏமாறலையும் துக்கத்தையுமே விளைவிக்கும். பிரகிருதியானது பலன்களின் தன்மையைப்பற்றிக் கவனியாமல் அந்தப்பலன்களை கொடுத்துவிடுகின்றது; அப்படியிருப்பதால் நாம் தான் நம் விருப்பப்படி தேர்ந்தெடுத்துக்கொள்ளல் வேண்டும். ஆகையால் "நீ பிரார்த்தித்துக்கேட்கும் விஷயங்களைப்பற்றி ஜாக்கிரதைகொள்" என்ற எச்சரிக்கையும் ஏற்பட்டிருக்கிறது.

'கிரியையானது சந்தர்ப்பங்களை உண்டுபண்ணுகிறது" என்பதையும், நம்மாலேயே செய்யப்பட்ட படுக்கைகளில் நாம் பள்ளிகொள்கிறோமென்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். நம்மு

டைய சீலத்துக்கும் சந்தர்ப்பங்களுக்குமுள்ள சம்பந்தத்தை கெவனமாய் விசாரணைசெய்தால், நம்மால் தப்பமுடியாதிருக்கிற சந்தர்ப்பத்தை எவ்வளவு நன்றாய் உபயோகப்படுத்தலாமென்று நாம் அறிந்துகொள்ளலாம். நம்மைச்சுற்றிலும் சுகத்தைப் பரவச்செய்வதற்கு நாம் ஜாக்கிரதையாய் முயற்சிசெய்யும்போதே நம்மிடத்தில் குறைவாயிருக்கிற குணங்களை அபிவிர்த்திசெய்யக்கூடிய சிந்தனைகளின் பிரயோஜனத்தை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். சௌக்கியக்குறைவிலிருந்து உற்சாகம் பொறுமை இவைகளின் சுகந்தமலர்களை நாம் தெரிந்துகொள்ளலாம். குடும்பக்கவலைகளினின்றும், தயையைக்கற்றுக்கொள்ளவும் நிர்வாகசக்தியை அபிவிர்த்தி செய்யவும்கூடும். பிரதிதினமும் வருந்தி உழைப்பதினால் தாங்கும் சக்தியைக் கற்றுக்கொள்ளலாம். சஞ்சலத்திலிருந்து தைரியத்தையும் சாந்தத்தையும் விகசிக்கச்செய்யலாம். கர்மநியதியை அறிந்தவன் ஒவ்வொன்றையும் பிரயோஜனமுள்ளதாய்ச் செய்துகொண்டு தீரத்தனமும் புத்தியுமுள்ள ஒரு தொழிற்காரனைப்போல் தன் வருங்காலத்தை நிர்மாணஞ்செய்துகொள்வான். கர்மம் நம்மை நிபந்தனைப்படுத்துகிறது, ஆனால் அதை உண்டுபண்ணினவர்கள் நாமே. நம் அறிவின் அளவைப்பொறுத்தே நம்முடைய அடக்கியாளும் திறமும் அமையும்.

பாக்கியாயுள்ள கேள்விகளின் சிறு தொடர் இதுவரையில் சொல்லிவந்ததின் சாராம்சத்தில், உண்மையாய் விடையளிக்கப்பட்டிருக்கிறது; ஆயினும் இன்னும் சில விபரங்களையும் கூறுவோம். "நாம் கர்மத்திற்கு உட்பட்டவர்களா அல்லது அதற்கு எஜமான்களா? நாம் அதன்முன் தாழ்மையாய் வணங்கவேண்டுமா அல்லது அதைப்பலமாய் எதிர்த்துப் போர்புரியவேண்டுமா? இன்றையதினமானது நேற்றையதினத்திலிருந்து வளர்ந்ததென்றும், நேற்றையதினம் அதற்குமுன்தினத்திலிருந்து வந்ததென்றும், இப்படிப் பின்னுக்குப்பின் செல்வோமானால் கெட்டவன் நல்லவனாய் ஆவது எங்ஙனம்? நாம் உண்மையில் ஓர் உறுதியான அவசியத்தால் கட்டாயப்படுத்தப்படுகிறோமல்லவா?

இத்தொடரின் முதற்கேள்வியை முன் விடையளித்தபடியே

சொல்லிமுடிப்போம். அதாவது: நாம் ஒருவகையில் கட்டுப்பட்டவர்களாகவும் இன்னொருவகையில் எஜமான்களாகவுமிருக்கிறோம் — நம்மிடத்தில் அறியாமை பாக்கியிருக்கிறதினால் கட்டுப்பட்டு நடப்பவர்களாகவும், அறிவினால் நாம் அடையும் சக்திகளினால் எஜமான்களாகவுமிருக்கிறோம். இரண்டாவதாகிய கேள்வி, எப்படியும் ஒரு முக்கியகுறிப்பை உண்டாக்குகிறது: ஒரு அதிக்கிரமித்த சக்தியின் பிடிப்பில் நாம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். அதற்கு விரோதமாய்ப்புரியும் போர் எதுவும் அபஜயத்தையே கொடுக்கிறது அப்படியானால் சண்டைசெய்வதில் ஏதேனும் பயனுண்டோ? ஒரு சொற்பநினைப்பாகிய ஒவ்வொரு உபயோகமும் பயனுள்ளதென்று காண்பிக்கும். குடிவெறி அல்லது சிற்றின்பபோகம் போன்ற சென்றகாலத்தில் உண்டாக்கிக்கொண்ட ஒரு கெட்ட சரீரப்பழக்கத்தை எடுத்துக்கொள்வோம். கர்மத்தை அறிந்துகொள்ளாதவன் "அதை நிவிர்த்திக்க என்னால் இயலாது" என்று ஏக்கத்துடன் சொல்லி, தீவிரயத்தனம் யாதுமின்றி அவன் அதற்கிணங்குகிறான். இவ்விதம் அவனைக்கட்டும் தீமையாகிற கயிற்றிற்கு, முன்னிருந்ததைவிடப் பலமுள்ளதாகும்படி இன்னொருபுரிசேர்த்துப் பின்னுகிறான். கர்மத்தை அறிந்தவன்; தன்னால் அதைத்தவிர்க்கமுடியாமலிருக்கலாம்; ஆயினும் தன்னால் முடிந்தவரையில், கடைசியில் தான் தவறினும் சரியே, அதை எதிர்த்துப் போர்புரியப் போவதாகச்சொல்வான். அவன் அப்படியே தன் சத்துருவை எதிர்த்து ஒரு துணிகரமான சண்டை செய்வான். அவன் சென்றகாலத்தில் ஏற்படுத்திக்கொண்ட அந்த அதிக்கிரமித்த சக்தியால், கடைசியில் தோற்று, அவன் மறுபடியும் தீமையில்மூழ்கிறான் ஆயினும் அவனுடைய மேன்மையான சண்டையானது, கெட்டகர்மாவாகிய அந்த உறுதியான கயிற்றின் அனேகபுரிகளை அறுத்துவிட்டிருக்கும். அவனுடைய சத்துரு மறுபடியும் அவனைத்தாக்கும்பொழுது, கயிறானது பத்திரக்குறைவாய் அவனைக்கட்டும். இவ்விதம் அந்தக் கயிறு தெறித்து அவனுடை அவயவங்களும் சுவயர்சிபெற்று, அவனுடைய சத்துருவையும் ஜயிக்கும்வரையில், பல சண்டை

கள்ளோட்டுப் படுதோல்வியடைந்தாலும், அதுவரையில் அதிகத் திறமையாய்ப் போர்புரிய அவன் சக்திபெற்றிருப்பான். ஒரு மனிதன் தீய இச்சை தீயபாவம் தீயசெய்கை இவைகளால் ஒரு தீமையை உண்டுபண்ணிக்கொண்டால், அதை உண்டாக்கின அவனே, நல்ல இச்சை, நல்லபாவம், நல்லசெய்கை இவைகளால் அதை வென்றெறிபவனுமாயிருக்கக்கூடும். ஒவ்வொருசரடாய் கர்மவலையானது பின்னப்படுகிறது; அவ்விதமே ஒவ்வொருசரடாகவே அது தெறிக்கப்படலாம். மனிதன் தன் விதியைத் தானே உண்டுபண்ணிக்கொள்கின்றானே தவிர வேறு யாரேனும் அவனுக்கு உண்டுபண்ணவில்லை வேறு எவரும் பலவந்தம் செய்யவில்லை ஆகவே உங்களுடைய சென்ற காலத்தால் நிகழ்காலமானது பந்தப்பட்டிருக்கிறதைப் பார்க்கிற நீங்கள் தைரியத்தை அடையுங்கள். அஞ்சாதீர்கள். நல்ல தைரியசாலிகளாயிருந்து, உங்களுக்குள்ள பலத்தையெல்லாங்கொண்டு முழுமுயற்சிசெய்யுங்கள். நீங்கள் தப்பாமல் சுயாற்சியடைந்து, இப்போது அடிமைகளைப்போல் தவிழ்கின்ற நீங்கள், எஜமானர்களாய் நிமிர்ந்து நிற்பீர்கள். ஏனெனில் தர்மம் தர்மமாகவேயிருக்கிறது நாம் எந்த தர்மத்தால் நம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டோமோ அதே தர்மத்தாலேயே நம்மை நாம் சுயாற்சிபெறச் செய்துகொள்ளமுடியும். அந்தத் தர்மம் அப்படியே மாறாமலிருக்கிறது எந்த தர்மத்தால் நாம் ஒன்றை அறியாமையிற் செய்துகொண்டோமோ அதை இப்போது அந்த தர்மத்தைக்கொண்டே அறிவினால் தவிர்த்துக் கொள்ளமுடியும். யாரும் கூடாதென்று சொல்வதற்கில்லை

இத்தொடரின் மூன்றாவது கேள்வி, வித்தியார்த்தியின் மனதை அடிக்கடி சஞ்சலப்படுத்தக்கூடியதொன்றாகும். துன்மார்க்கமாய்த் தன் வாழ்நாளை செலுத்திக்கொண்டிருக்கும் ஒரு கெட்ட மனிதன் மறுஜன்மத்தில் அதிகத் துன்மார்க்கமுள்ளவனாய்ப் பிறந்து, இப்படியே மென்மேலும் நடந்துகொண்டிருக்கவேண்டாமா? தடை செய்யும் சக்திகள் சில இருக்கின்றன. அவைகள் ஆராய்ந்தறியத் தகுந்தவை. முதலில் துன்மார்க்கத்தை துக்கம் தொடர்கின்றது. இவ்வுலகத்திற் கொஞ்சமாயும்

மறுவுலகத்தில் மிகுதியாயும் தொடருகிறது. குடியன் காமி இவர்கள், நரம்புகள் தளர்ந்து, சுகமும் கேடுற்று, ஊதிப்போன இழிவான சரீரிகளாய்ச் செய்துகொள்ளுகின்றனர். அப்படிப்பட்ட ஒருவன் தன் மூட்டாள் தனத்திற்காக வருந்தியும், தனக்கு மறுபடியும் ஜன்மமேற்படும்போது தான் அப்படிக்கில்லாதவிதமாய் வசிப்பதாய் உறுதி சொல்லுவதையும் எத்தனை தரம் நாம் கேட்டிருக்கிறோம். நாம் என்ன நம்மிஷ்டப்படி செய்தபோதிலும், அனுபவமானது கற்பித்துவிடுகிறது. அந்த அவமதிக்கப்பட்ட சட்டமும் கெடுதல் செய்தோனை நசுக்கிவிடுகிறது. கெட்ட இச்சை என்னும் தேள், அந்த இச்சையை வளர்ப்பவனைக் கொட்டவே, மரணத்திற்குப் பின் தொந்திரவானது அதிகக் கடுமையாகிறது. அந்த மனிதனும் தான் ஓர் நியதியான உலகத்தில் வசித்துக்கொண்டிருப்பதாயும் அங்கே எல்லைச்சுவர்களில் மோதிக்கொள்ளலாமேயொழிய அவைகளை தகர்த்துச்செல்ல முடியாதென்றும் அறிந்துகொள்ளும்படி பலவந்தம் செய்யப்படுகிறான். இவன் இந்த மத்திய உலகத்தை விட்டு மனோவுலகம் செல்லும்போது, தன்னிடமுள்ள நன்மையின் ஒவ்வொரு விதையும் புஷ்பமாக வளர்கின்றது. அவனிடமுள்ள பரிசுத்தமும் அன்பும் வாய்ந்தவைகளெல்லாம் வளர்ந்து அதிகரிக்கின்றன. மனோவுலக வாழ்க்கை முடியவும் அவனுடைய நல்ல அம்சங்கள் பலப்பட்டு அவனுடைய சக்திகளும் அதிகரிக்கின்றன. அவன் பூலோகம் திரும்புங்கால், தான் முன் இன்புற்றிருந்த தீமைக்கு பயந்து ஓடுகிற ஒரு சுவபாவத்தை, தன் துக்கானுபவத்தின் பயனாய் தன்னோடு கொண்டுவருகிறான். கஷ்டப்பட்டதின் ஞாபகமானது ஜீவனுள் சுட்டு அதைத் தூண்டின தீமையைத் தடுப்பதற்கு ஓர் காரணமாய் ஏற்படுகிறது. இவ்விதமாக நியதியின் செய்கையால் அந்தக் குறிப்பிட்ட துன்மார்க்கத்தை உத்தேசித்து அந்த மனிதனின் சுவபாவத்தில் ஓர் மாறுதலை உண்டாக்குகிறது. இன்னமும், விகாசமுறை என்ற பெருப்பிரவாகத்தில் மனிதவர்க முழுவதுமே கொஞ்சங்கொஞ்சமாய் முன்னேக்கிச் செலுத்தப்படுகிறது. தீங்கு செய்வோனும், தான் தங்கியிருக்கும்படியாய்த் தன் சொந்த அபிவிர்த்தியைத் தடை செய்தபோதிலும்,

அவனும் அதனோடு கொண்டுபோகப்படுகிறான். ஆனால் மொத்தத்திற்கு விரோதமாய் அதின் ஒரு பகுதியின், அடங்காத நிலையானது, அதாவது, பொதுவான நோக்கத்திற்கு விரோதமாயுள்ள ஒரு தனி மனிதனின் இறுமாப்புள்ள நிலையம், தாங்க முடியாத தொந்திரவு நேரும்படி ஒன்றோடொன்று உரைகின்றது. கடைசியாக இந்த உபத்திரவத்தின் வலுவான பலவந்தத்தினால் நின்றுவிடுகிறது. அல்லது, மறுபடியும் அந்த துன்மார்க்கி, ஒரு புஸ்தகத்தைப் படிக்கிறான், அல்லது ஒரு பிரசங்கத்தைக் கேட்க்கிறான், அல்லது ஒரு மனிதனைக்கண்டு பேசுகிறான், இவைகள் இவன் சென்றுகொண்டிருந்த பாதையின் தவறுதலை உணரும்படிக்கான ஓர் உணர்ச்சியை இவனிடம் கிளப்பி இவன் தனக்கே உண்டுபண்ணிக்கொண்ட தொந்திரவைப்பார்க்கும்படியாகச் செய்து, இவனுடைய புத்தியையும் எண்ணத்தையும் மாற்றும்படியான வழிக்குத் திருப்புகின்றன. அல்லது மறுபடியும், இவன் பக்தி விசுவாசத்துடன் போற்றுமவர்களுடைய அதிருப்தியென்ன, துவேஷத்தை அடைவதற்கு பதிலாக பிரீதியை அடையவேண்டுமென்ற ஆசையென்ன, இவைகள் இவனை தீமையினின்று நிறுத்தி, நன்மையே செய்யும்படி ஓர் பதுக்காரணமாக இவனிடம் வேலை செய்கிறது அல்லது இன்னமும், அவனுடைய சொந்த வளர்ச்சியென்ற விஷயமாகிய அவனுடைய அந்தராத்மாவாயுள்ள பரமாத்மாவின் விகாசமானது, எவ்வளவு மெதுவுள்ளதாயினும் நன்மையின் சார்பாகவேயிருக்கிற இயற்கைசுவபாவத்தை துரிதப்படுத்தி தீமை செய்யாவண்ணம் விவாதத்தை உண்டுபண்ணுகின்றது. மனித சுவபாவம் மேல் நோக்குள்ளதே தவிர கீழ்நோக்குள்ளதன்று. தன் சுவபாவத்திற்கு துரோகம் செய்வதினால்தான், சூரியனை நோக்கி நிமிர்ந்து நடப்பதற்குப்பதிலாக மனிதன் குப்பையிற் கிடந்து புரளுகிறான்.

"நாம் உண்மையில் ஓர் உறுதியான அவசியத்தால் கட்டாயப்படுத்தப்படுகிறோமல்லவா" பிரபஞ்சத்தை பந்தப்படுத்துகிற அவசியம் ஒன்றே ஒன்றுதான். அதாவது அதைப் பூரணமாக்கி ஆனந்த நிலைமைக்கு உயர்த்துவதென்ற அதன் சிருஷ்டி.

கர்த்தாவின் அன்பார்ந்த இச்சையே. ஈசுவரனுடைய பிராணனே அவரது பிரபஞ்சங்களிலுள்ள பிராணனுயிருப்பதால் அந்தப் பிராணன்; சௌந்தரியம், நன்மை, சுகம் இவைகள் பூர்ணமாய் விளங்கும்படியாய் அவைகளை எப்போதும் உயர்த்துகின்றது. விகாசமென்பது அந்த இச்சாசக்தியின் தத்வமாயிருக்கிறது காந்தசக்தியோடுகூடிய முள்ளானது துருவத்தை நோக்கியிருப்பது போல், சமீபத்திலோ காலக்கிரமத்திலோ, தெய்வ இச்சையின் அம்சமான மனிதனுடைய இச்சையானது அந்த தெய்வ இச்சையையே நோக்குகின்றது. மனிதன் தன்னுடனேயே சச்சரவு செய்கிறபடியால் சீரழிவும் தொந்திரவும் ஏற்படுகிறது. மனிதன் சாச்வதமான சுகத்தையும், சாயையைவிட்டு யதார்த்தத்தையும் நோக்குங்கால் அப்போது தன்னுடனும் தெய்வத்தன்மையோடும் ஒருமைப்பட்டு, சாந்தியை அடைவான்.

---

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 10 | 7 | கர்மம் | காமம் |
| ,, | 9 | கர்மத்தாலும் | காமத்தாலும் |
| 12 | 9 | கர்மம் | காமம் |
| 16 | 7 | கர்மம் | காமம் |
| 18 | 31 | அவனுடை | அவனுடைய |

## ...ந்நிவசனம்.

இத்தொடரில், பிரம்மஞானசங்கத்தாரால் வெளியிடப்பட்டு வரும் Adyar Pamphlets, Adyar Popular Lectures முதலிய ... இங்கிலீஷ் புஸ்தகங்களை, இங்கிலீஷ் பயிற்சி இல்லாத தமிழ் ...ன்பர்களும், மற்ற ... மாணிகளும் படித்துத் தெரிந்துகொள் ...பொருட்டு தமிழில் மொழிபெயர்த்து, மாதமொரு புஸ்தகமாக வெளியிட உத்தேசித்திருக்கிறோம்.

முன்பணம் செலுத்தும் சந்தாதாரர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபால் சார்ஜுள்பட ரூ 1—8—0.

தனிப்புஸ்தகம் விலை 0—2—0 தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

தேவையுள்ளவர்கள் தஞ்சாவூர் ஜில்லா பேரளம் போஸ்டு திருமியச்சூர் சாந்தி ஆச்ரமம் காரியதரிசிக்கு எழுதக்கோருகிறோம்.